

கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., பெரம்பலூர் மாவட்டம், வேப்பூர் கிராமத்தைச்சேர்ந்த மாநில வர்த்தக அணி துணை அமைப்பாளர், வி.எஸ்.பெரியசாமி அவர்கள் மாரடைப்பால் மறைவெய்தியதையடுத்து அவரது இல்லம் சென்று பெரியசாமி உருவப்படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



விழுப்புரத்தில் சமூக நீதி தலைவர் – கலைஞர் நூற்றாண்டு விழாக் குழு சார்பில் அமைச்சர் க.பொன்முடி தலைமையில் நடைபெற்ற புகைப்படக் கண்காட்சியில் மாணவ – மாணவிகள் திரளாக பங்கேற்று கண்டுகளித்தனர்.

### செப். 15 பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் விழா! திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# தாராபுரத்தில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை! கழகத்தினர் திரளாக பங்கேற்பீர்!

## மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் வேண்டுகோள்!



*திருப்பூர், செப். 14 -*

திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

காஞ்சி தந்த காவியத் தலைவர், உலகத் தமிழர் உள்ளங்களில் எல்லாம் சிம்மாசனம் போட்டுக் கொலுவீற்றிருக்கும் செந்தமிழ் அறிஞர், தமிழ் மொழி உயர்வுக்காகவும், தமிழ் இனத்திற்காகவும், தமிழ் நாட்டிற்காகவும், தமிழ் மொழிக்காவும் தன் வாழ்நாள் வரை தன்னை அர்பணித்து தன் நலம் கருதாமல் பாடுபாட்டு தன் பேச்சால், எழுத்தல் தமிழனை தட்டி எழுப்பிய "தென்நாட்டு காந்தி" இந்நாட்டு இங்கர்சால்" என்று மக்களால் அன்புடன் அழைக்கப்பட்டவர் "பேரறிஞர் அண்ணா"அவர்கள் மாபெரும் இயக்கமான தி.மு.கழகத்தை உருவாக்கி கழகத் தோழர்களுக்கு கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் தாரக மந்திரத்தை தந்து, மதராஸ் என்ற பெயரை "தமிழ்நாடு" என்று மாற்றித் தந்தும்,"பேரறிஞர் அண்ணா"என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட நம் பேரறிஞர் அண்ணா அவர்களின் 116 வது ஆண்டு பிறந்த நாளான நாளை (15.9.2024 - ஞாயிற்றுக் கிழமை) காலை 9.30 மணி யளவில் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் தாராபுரத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் மாவட்டக் கழகச் செயலாளர் ஆகிய எனது தலைமையில் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

இதேபோல் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகதிற்குட்பட்ட அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் மற்றும் ஊராட்சி பகுதிகளில் கழகத்தின் சார்பாக அமைதிப் பேரணிகள் நடத்தியும், பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்தும், திருவுருவச்சிலை இல்லாத இடங்களில் திருவுருவப் படத்திற்கும் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்திட வேண்டுகிறேன்.

இந்நிகழ்ச்சிகளில் ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளை கழக செயலாளர்கள், அந்தந்த பகுதிகளில் உள்ள கழக இன்னாள், முன்னாள் நிர்வாகிகள், சட்டமன்ற இன்னாள், முன்னாள் உறுப்பினர்கள், கழக துணை அமைப்புகளின் இன்னாள், முன்னாள் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் இந்நாள், முன்னாள் மக்கள் பிரதநிதிகள் மற்றும் கழக தோழர்களும், பொதுமக்களும் பெருந்திரளாக பங்கெடுத்திடச் செய்ய வேண்டுமாய் கேட்டுகொள்கிறேன்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# திருவாரூர் தொ.மு.ச. சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா!

## பூண்டி.கே.கலைவாணன் - உ.மதிவாணன் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கினர்!

*திருவாரூர், செப்.14-*

திருவாரூர் மாவட்ட தொ.மு.ச. சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா திருவாரூர் அரசு போக்குவரத்துக் கழகம் பணிமனை எதிரே அருகே கழக கழகக் கொடி மற்றும் தொழிலாளர் முன்னேற்ற சங்க கொடி ஏற்றிப்பட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., முன்னாள் அமைச்சர் தாட்கோ தலைவர் உ.மதிவாணன், தொ.மு.ச. பேரவை மத்திய சங்க பொதுச் செயலாளர் பாண்டியன் ஆகியோர் பங்கேற்றனர்.

திருவாரூர் மாவட்ட தொ.மு.ச. சார்பில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா திருவாரூர் அரசு போக்குவரத்துக் கழகம் பணிமனை எதிரில் இடைவிடாமல் மழை பெய்து கொண்டிருக்கும் போதும் மத்திய சங்க பொது செயலாளர், பேரவை செயலாளர், (குடந்தை நாகை மண்டலம்) பாண்டியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் மாவட்ட கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் பூண்டி கலைவாணன் மற்றும் முன்னாள் அமைச்சர், தாட்கோ மாநில தலைவர் உ.மதிவாணன் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்விற்கு நகர கழக செயலாளர் வாரை. பிரகாஷ், ஒன்றிய கழகச் செயலாளர், ஒன்றிய பெருந்தலைவர் புலிவலம் தேவா, மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளர், திட்டக் குழு உறுப்பினர் இரா.சங்கர், மத்திய சங்க பொருளாளர் திருவரசமூர்த்தி, முன்னாள் ஒன்றிய துணைச் செயலாளர் கலியபெருமாள், மத்திய சங்க அலுவலக செயலாளர் கணேசன், தொ.மு.ச. சங்க பொருளாளர் தமிழ்செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் ஏழை எளிய ஆதரவற்ற மக்களுக்கு பொது மக்களுக்கு இலவச வேட்டி, சேலைகள் மாணவர்களுக்கு நோட்டு,புத்தகம் உள்ளிட்ட கல்வி உபகரணங்கள் மற்றும் பொதுமக்கள் அனைவருக்கும் தென்னை மரக்கன்றுகள் வழங்கப்பட்டது.

உடன் கொரடாச்சேரி தெற்கு கழக ஒன்றிய செயலாளர் பாலச்சந்திரன், மாவட்ட பிரதிநிதி, நகர மன்ற உறுப்பினர் அசோகன், கிளை பொருளாளர் ரவிச்சந்திரன், கிளைத் துணை தலைவர் ராஜசேகர், கிளை துணைச் செயலாளர் சண்முகம், ஆட்டோ சங்க செயலாளர் ராஜாஜி, தொ.மு.ச. பொதுக்குழு உறுப்பினர்கள் அறிவழகன், சபாபதி, வெங்கடேசன், முத்துக்குமாரசாமி, வெற்றிவேல், கண்ணன், வெற்றிவேல், ரவிச்சந்திரன், வினோத்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர். திருவாரூர் கிளைச் செயலாளர் சேகர் நன்றி தெரிவித்தார்.

### பகுதிச் செயலாளர் சரத் விக்னேஷ் தலைமையில்

# கவுண்டம்பாளையம் பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி சிறப்புரை!

*கோவை, செப். 14-*

கோவை கவுண்டம்பாளையம் பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி செயலாளர் சரத் விக்னேஷ் தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, 2026 சட்டமன்றத் தேர்தலில் நூற்றுக்கு நூறு சதவீதம் அனைத்து தொகுதிகளிலும் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றியினை பெற இப்போதே தீவிரமாக உழைத்திட வேண்டும் என்று, கூறினார்.

கூட்டத்தில் மூத்த முன்னோடிகளுக்கு கேடயம் வழங்கி பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டனர்.

இதில் மாநில, மகளிர் தொண்டரணி துணைச் செயலாளரும் மாநகராட்சி கல்வி குழுத் தலைவருமான திருமதி மாலதி, துணைச் செயலாளர் அசோக்பாபு ஆறு குட்டி, முன்னாள் எம்.பி.நாகராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.பி.எஸ்., பகுதி அவைத் தலைவர் சண்முகசுந்தரம், 35வது வட்டக் கழக அவைத் தலைவர் சோ.துரைப் பாண்டியன், பகுதி துணைச் செயலாளர்கள் சங்கர், ஈஸ்வரன், கண்ணகி, பொருளாளர் வசந்தகுமார், மாவட்டப் பிரதிநிதிகள் லோகநாதன், கல்யாணசுந்தரம், சுனில்குமார், பிரபாகரன், வட்டச் செயலாளர்கள் குட்டி என்ற வேலுச்சாமி, குமரேசன், தன்ராஜ், காளிதாஸ், ரமணன் மாமன்ற உறுப்பினர்கள் சம்பத், சுபஸ்ரீ சரத், தமிழ்ச்செல்வன், கிருஷ்ணமூர்த்தி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

அ.தி.மு.க. நகர மாணவரணி இணைச் செயலாளர் கனகராஜ் மாவட்டச் செயலாளருக்கு பொன்னாடை போர்த்தி தன்னை தி.மு.க.வில் இணைத்துக் கொண்டார்.



கோவை கவுண்டம்பாளையம் பகுதி பொது உறுப்பினர்கள் கூட்டம் பகுதி செயலாளர் சரத் விக்னேஷ் தலைமையில் நடைபெற்றது. இதில் வடக்கு மாவட்ட செயலாளர் தொ , அ ரவி, சிறப்புரையாற்றினார். இதில் மாநில, மகளிர் தொண்டரணி துணைச் செயலாளரும் மாநகராட்சி கல்வி குழு தலைவருமான திருமதி மாலதி, துணைச் செயலாளர் அசோக்பாபுஆறு குட்டி, முன்னாள் எம்பி நாகராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் டி பி எஸ், , பகுதி அவை தலைவர் சண்முகசுந்தரம், 35 வது வட்டக் கழக அவைத்தலைவர் சோ. துரைப்பாண்டியன், பகுதி துணைச் செயலாளர்கள் சங்கர், ஈஸ்வரன், கண்ணகி, பொருளாளர் வசந்தகுமார், மாவட்ட பிரதிநிதிகள் லோகநாதன், கல்யாணசுந்தரம், சுனில்குமார், பிரபாகரன், வட்டச் செயலாளர்கள் குட்டி என்ற வேலுச்சாமி, குமரேசன், தன்ராஜ், காளிதாஸ், ரமணன் மாமன்ற உறுப்பினர்கள் சம்பத், சுபஸ்ரீ சரத், தமிழ்ச்செல்வன், கிருஷ்ணமூர்த்தி, ஆகியோர் கலந்து கொண்டனர்.

### தலைமை : அமைச்சர் மு.பெ.சாமிநாதன், வரவேற்புரை: இல.பத்மநாபன்!

# தூரம்பாடி இல.மோகன்ராஜ் - பல்லடம் கே.பி.சீனிவாசன் இல்ல திருமண விழா!

## முன்னிலை: அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் - க.செல்வராஜ் எம்.எல்.ஏ.



*திருப்பூர், செப். 14-*

திருப்பூர் தெற்கு மாவட்டப் பிரதிநிதி தூரம்பாடி இல.மோகன்ராஜ், பல்லடம் வேளாண்மை பொறியியல் கூட்டுறவு பணி மைய முன்னாள் தலைவர் கே.பி.சீனிவாசன் இல்ல திருமண விழா தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன் தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் வரவேற்புரையில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என். கயல்விழி செல்வராஜ், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ. முன்னி லையில் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், மு.பெ. சாமிநாதன் தலைமையில், திருப்பூர் தெற்கு மாவட்டக் கழக செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் வரவேற்புரையில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என். கயல்விழி செல்வராஜ், திருப்பூர் வடக்கு மாவட்டக் கழக செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., முன்னிலையில் திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம், பூமலூர் கிடாத்துரை, சின்ன பெரியான் தோட்டம், பல்லடம் வேளாண்மை பொறியியல் கூட்டுறவு பணி மைய முன்னாள் தலைவர் கே.பி.சீனிவாசன் பேபி (எ) சீ.கலாமணி ஆகியோரது குமாரர் சீ.சரண் BBA.,LLB (Hons), திருப்பூர் மாவட்டம், முளையாம்பூண்டி கிராமம், கரைவலசு, பாறைக்கடை மாவட்ட பிரதிநிதி தூரம்பாடி இல.மோகன்ராஜ், தூரம்பாடி ஊராட்சி முன்னாள் தலைவர் வனிதா மோகன்ராஜ் ஆகியோரது குமாரத்தி மோ.நவீனா B.A.,LLB (Hons) இவர்களது திருமணம் 15.09.2024 ஞாயற்றுக்கிழமை அன்று காலை 6.00 மணி முதல் 7.25 மணிக்குள் காங்கேயம், திருச்சி சாலையில் அமைந்துள்ள ஸ்ரீ மஹாராஜா மஹாலில் வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக செயலாளர்கள், மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை கழக நிர்வாகிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், உள்ளாட்சி மக்கள் பிரதிநிதிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக உடன்பிறப்புக்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர்.




இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மதுரையில் நடைபெற்ற அரசு விழாவில் மகளிர் சுய உதவிக்குழுகளுக்கு வங்கிக்கடனுதவிகளை வழங்கினார்கள். அதனைத்தொடர்ந்து திருவாரூர் மாவட்டம் காட்டூர் அஞ்சுகம் அம்மையார் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடனுதவி வழங்கும் விழாவில் 947 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.62.07 கோடி வங்கிக்கடனுதவிகளை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் வழங்கினார்.மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, பாலசுப்ரமணியன், ஒன்றிய பெருந்தலைவர் உமாபிரியா ஆகியோர் உடன் இருந்தனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மயிலை ந.பூ.இராமஜெயம்

### செப்டம்பர் 14 (2007)



**இளமைக்காலத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.**

**வட்ட மற்றும் பகுதி அவைத் தலைவராகவும் பின்னர், பகுதிக் கழகச் செயலாளராகவும், தென்சென்னை மாவட்ட அவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.**

**1996ஆம் ஆண்டு மயிலை தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**இந்து நாளிதழ் தொழிற்சங்கத்தில் தொடர்ந்து 35 ஆண்டுகள் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.**

**"நான் மதிக்கின்ற, போற்றுகின்ற, புகழ்கின்ற, பாராட்டுகின்ற, என்நெஞ்சில் வைத்து நினைத்து மகிழ்கின்ற ஒரு தொண்டன் ராமஜெயம்" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**